முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம். விழுப்புரம்.

**S.C.No.58/2017**

மற்றும்

**S.C.No.280/2020**

**(LW -6) (PW - 3)**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முத்தால் | மதம் | |
| **த.பெ.** | துரைசாமி | தொழில் | |
| ஊர் | திருவெண்ணையநல்லூர் | வயது | 62 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 23,09,2025 |

**இன்று** (23.09.2025) **சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.**

2,5,6,7,8 **எதிரிகள் ஆஜர்** ,4 **வது எதிரி ஆஜர்** (எஸ்.சி.280/2020)

**சத்தியமாக சொல்கிறேன்**

**முதல் விசாரணை**

நான் திருவெண்ணைநல்லூரில் வசித்து வருகிறேன் வழக்கு சம்பவம் பற்றி எனக்கு தெரியாது, தற்போது என் னிடம் காட்டப்படும் கையெழுத்து என்னுடையது அல்ல போலிசார் என்னை விசாரிக்கவில்லை போலீசார் என்னை விசாரிக்கவில்லை

சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கோரி அனுமதி வழங்கப்பட்டது,

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

11 3 2011 அன்று காலை சுமார் 7,30 மணிக்கு பத்மராயன் மற்றும் என் முன்னிலையில் திருவெண்ணெய்நல்லூர் காவல் ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தார் என்றும் அதில் நான் சாட்சியாக கையெழுத்திட்டேன் என்றும் போலீஸ விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர், எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை எதுவும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது,

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.
**Sd/-A.Tamilselvan, M.L.,**
Principal Subordinate Judge,
Villupuram

முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம். விழுப்புரம்.

**S.C.No.58/2017**

மற்றும்

**S.C.No.280/2020**

**(LW -2) (PW - 2)**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மாரி | மதம் | |
| க.பெ. | பிரகலாதன் | தொழில் | |
| ஊர் | திருவெண்ணையநல்லூர் | வயது | 67 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 23,09,2025 |

**இன்று** (23.09.2025) **சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.**

2,5,6,7,8 **எதிரிகள் ஆஜர்** ,4 **வது எதிரி ஆஜர்** (எஸ்.சி.280/2020)

**சத்தியமாக சொல்கிறேன்**

**முதல் விசாரணை**

நான் திருவெண்ணைநல்லூர் பாலாஜி நகரில் வசித்து வருகிறேன் கடந்த 2011 ஆம் வருடம் நான் திருவெண்ணைநல்லூர் கடை வீதியில் பழைய பஸ் ஸ்டாப்பில் இரவு நேர இட்லி கடை நடத்தி வைங்க எனக்கு உதவியாக எனது மகன் கணேசன் என்பவர் இருந்து வந்தார் 10 3 2011 அன்று இரவு சுமார் •930 மணிக்கு சிலர் கூட்டமாக வந்தார்கள் அவர்கள் கையில் தடி இருந்து பைப்பு வைத்திருந்தார்கள் என்னை கெட்ட வார்த்தையால் திட்டி தகராறு செய்தார்கள் ஏன் பிரச்சினை செய்கிறீர்கள் என்று எனது மகன் கேட்டார் கூட்டத்தில் இருந்தவர்கள் என்னை மகனை அடித்து விட்டார்கள் தடுக்க வந்த என்னையும் அடித்து விட்டார்கள் உயிரோடு விடமாட்டோம் என்று மிரட்டினார்கள் அருகில் இருந்தவர்கள் வந்து தடுத்தார்கள் சம்பவ சமயம் இரவு நேரம் என்பதாலும் கூட்டமாக வந்ததாலும் யார் என்னை மகனையும் அடித்தார்கள் என்று எனக்கு அடையாளம் காட்ட இயலாது தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளவர்களை எனக்கு தெரியாது காயம் பட்ட எனது மகனை அரசு விழுப்புரம் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை போலீசார் என்னை விசாரிக்கவில்லை

சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கோரி அனுமதி வழங்கப்பட்டது,

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

10 3 2011 அன்று இரவு சுமார் 9 மணிக்கு நான் இட்லி கடையில் இருந்த போது எனக்கு உதவியாக எனது மகன் கணேசன் மற்றும் இருந்தபோது ஆஜர் எதிரிகளும் மற்ற எதிரிகளும் தடி மற்றும் இரும்பு ராடு ஆகியவுடன் கும்பலாக வந்து என்னை ஆபாசமாக திட்டினார்கள் என்றும் ஊருக்கு சப்போட்டா இங்கு கடை வைத்திருக்கிறீர்களா என்றும் சத்தம் போட்டு பிரச்சனை செய்தார்கள் என்றும் தனது மகன் ஏன் பிரச்சனை செய்கிறீர்கள் என்று தட்டிக் கேட்டார் என்று அப்போதும் கும்பலில் இருந்த தட்சிணாமூர்த்தி இரும்பு ராடு பைப்பால் இத்தோடு செத்து மடிடா என்று சொல்லி எனது மகனின் தலையில் வலது பக்கத்தில் அடித்தார் என்றும் இதில் சத்யராஜ் என்பவர் கையில் வைத்திருந்த இரும்பு பைபாலும் மற்றும் ரஜினி செந்தில் என்பவர் அவர் வைத்திருந்த தடியால் என் மகனின் வலது தோள்பட்டையில் அடித்தார் என்றும் என் மகனை காலால் எட்டி உதைத்தார் என்றும் அப்போது எனது மகனின் தலையில் ரத்தம் கொட்டியது என்றும் போலிஸ் விசாரணை சொன்னேன்

என்றால் சரியில்லை தடுக்க வந்த என்னையும் மணி சூரியன் பார்த்திபன் ஆகியோர் கையாளும் காலாலும் உதைத்தார்கள் என்றும் போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல எதிரிகள் அனைவரும் தடி இரும்பு பைப்பு கத்தி ஆகியவற்ற வைத்துக்கொண்டு நீ எங்க பேச்சைக் கேட்கவில்லை என்றால் உங்களை உயிரோடு விடமாட்டோம் என்று கொலை மிரட்டல் செய்தார்கள் என்று போலீஸ் விசாரணையில் சொன்னேன் நின்றால் சரியல்ல தடுக்க வந்த அய்யனார் சுப்பையா ஆகியோர்களின் கொன்று விடுவோம் என்று மிரட்டினார்கள் என்று போலீசில் சொன்னேன் என்றால் சரியல்ல, இது சம்பந்தமாக எனது மகன் புகார் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியில்ல இந்த உண்மைகளை மறைத்து எதிரிகளை காப்பாற்ற பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர், எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை எதுவும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது,

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

**Sd/-A.Tamilselvan, M.L.,**
Principal Subordinate Judge,
Villupuram